1975 அக்டோபர் 23]

Sales Tax on X-ray films.

* 23. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether the President of the Tamil Nadu Branch of the Indian Radiological Association has made a request to the State Government on 19th July 1974 to exempt X-ray films from the levy of Sales Tax ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, சாதாரண ஏழை எளிய மக்கள் இந்த எக்ஸ்-ரே பிலிமிற்கு விற்பனை வரி அதிகமாக இருப்பதால் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். குறைந்த வருமானம் உள்ளவர்கள் எக்ஸ்-ரே எடுக்கும் நேரங்களில் கஷ்டப் படுகிறார்கள் என்ற காரணத்தினால், அதற்கு விற்பனை வரி யிலிருந்து விலக்கு அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அதற்கு ஒரு முனை வரிதான் போடப்பட்டு இருக்கிறது. கம்பெனி யிலிருந்து வாங்கும்போது வரி விதிக்கப்படுகிறது. குறைந்த வருமானம் உள்ள நோயாளிகளுக்குப் பயன்படுகிற வகையில் தான் வரிவிலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது.

உதகை அரசு பால் பண்ணை

* **24 வினா.—திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

உதகை நகரத்திலுள்ள அரசு பால்பண்ணையை விரிவு படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

Kodaikanal-Palani ropeway.

* 25. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that a rope way will be laid to link Kodaikanal with Palani; and

(*b*) if so, the details thereof ?

[1975 அக்டோபர் 23

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் நிர்வாகம் பழனி திருக் கோயிலையும் கொடைக்கானல் குறிஞ்சியாண்டவர் திருக் கோயிலையும் வான் கயிற்றூர்தி வழி இணைப்பது குறித்து பரிசிலித்து வருகிறது.

(இ) இத்திட்டம் சம்பந்தமான விவரங்கள் ஆய்விலுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, ஆரம்பப் பரிசிலனையில் கிட்டத்தட்ட பழனியிலிருந்து கொடைக்கானல் செல்வதற்கு 40 மைல் சுற்றிப்போக வேண்டியிருக்கிறது, ரோப்-வே மூலம் சென்றால் 16 மைல் தான் ஆகிறது என்றும் சொல்லப் பட்டது. ஆகவே, அதை அமல்படுத்தினால் கொடைக்கானலை டூரிஸ்ட் சென்டராக ஆக்குவதற்கும், கோவிலுக்கு அதிகமான வரு மானம் வருவதற்கும் ஏதுவாக இருக்கும். அந்தக் கோவிலுக்கும் அதிகமான பணம் இருக்கிறது. சர்க்காருக்கும் அதிக வருமானம் வர வழி இருக்கிறது. பொதுமக்களுக்கும் சௌகர்யம் செய்து கொடுத்தமாதிரி இருக்கும். ஆகவே, அதை நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ரோடு வழியாக செல்லவேண்டுமானால் 40 மைல் தூரம் செல்ல வேண்டி இருக்கிறது. ரோப்-வே மூலம் சென்றால் 16 மைல் தூரம்தான் இருக்கிறது. இது குறித்து பல ரோப்-வே கம்பெனிகளோடு தொடர்பு கொண்டோம். அவர்கள் அதைப்பற்றி ஆராய்ந்து ஒரு சிறிய குறிப்பு கொடுத்துள்ளார்கள். அதற்கு சுமார் உத்தேச செலவு ரூ. 10 கோடியாகும் என்று சொல்கிறார்கள். இரண்டு மணி நேரத்தில் 400 பயணிகள் அதிலே செல்லலாம் என்றும், பொருள் களைக் கூட அந்த ரோப்-வே மூலமாக அனுப்பலாம் என்றும் தகவல் கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் மேற்கொண்டு அதுபற்றி ஆராய்ந்து வெகு விரைவில் முடிவு எடுத்தால், அரசாங்கம் அது குறித்து பரிசிலனை செய்யும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த ரோப்-வே வியாபார நோக்கத்தோடு ஆரம்பிக்கப்படுகிறதா, அல்லது பக்தர்களை அழைத்துச் செல்ல ஆரம்பிக்கப்படுகிறதா, எந்த அடிப்படையில் எச்.ஆர்.அன்டு.சி.இ. இதில் வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

1975 அக்டோபர் 23]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இரண்டு நோக்கங்களும் நிறைவேறும்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சென்டிரல் டூரிஸ்ட் டிபார்ட்மென்டிடம் நாம் அதிகமான தொகை கேட்டால் கிடைக்கும், ஏனெனில் கொடைக்கானலை ஒரு பெரிய டூரிஸ்ட் சென்டராக ஆக்கவேண்டுமென்று மத்திய அரசிடத்தில் ஒரு திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, நமக்கு ஆகும் செலவில் பெரும் பகுதியை மத்திய சர்க்காரிடத்திலிருந்து நாம் வாங்கிவிடலாம். இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை பணம் கேட்டு இருக்கிறதா? இல்லையென்றால், இனிமேலாவது அதைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் இறுதியாக முடிவு செய்யப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய யோசனையைக் கருத்தில் கொண்டு உதவி கேட்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

4. அறிவிப்புகள்.

(அ) அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் மற்ற அலுவல்களை எடுத்துக்கொள்வதற்கு முன், பேரவையின் 55-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் குறித்து பேரவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள் :

" This House expresses its want of confidence, in the Ministry headed by Hon. Thiru M. Karunanidhi."

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இருக்கையில் இல்லாததால், அதை எடுத்துக்கொள்வதற்கு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.